DOLPHIN
Primary books

டால்பின் வழங்கும்

# பாட்டுப் பாட வா...

## கதைகளுடன்

பாகம் :2



Paddu Pada Vaa Part - 2

# வள்ளுவர்



குமரிக் கடல் நடுவிலே

குண்டு மேடை தன்னிலே

குறளைத் தந்த வள்ளுவன்

குற்றமற நிற்கிறார்

குழந்தை நாமும் போற்றுவோம்

குறளைத் தினமும் படித்திடுவோம்.

# தேசியக்கொடி



கொடியைப் பாரு கொடியைப்பாரு
நம் நாட்டுக் கொடியைப்பாரு
பச்சை வெள்ளை **காவி** பாரு
பட்டொளி வீசிப் பறக்குது பாரு
பச்சை வளத்தைக் குறிக்கும் பாரு
வெள்ளை வாய்மை உரைக்கும் பாரு
**காவி** தியாகம் உணர்த்தும் பாரு
சக்கரம் சொல்லும் ஒருமைப்பாடு
பெருமையோடு வணக்கம் போடு.

# கிரிக்கெட்



எனக்குப் பிடித்தது கிரிக்கெட்டு
சேர்ந்து நீயும் கை தட்டு
நானும் மட்டை பிடித்திடுவேன்
பந்தை எல்லாம் அடித்திடுவேன்
அண்ணன் அக்கா இருவரையும்
அவுட்டாக்கி மகிழ்ந்திடுவேன்
சீறி வரும் பந்தையெல்லாம்
சிக்சருக்கு அடித்திடுவேன்
பாய்ந்து வரும் பந்தையெல்லாம்
பக்குவமாய்ப் பிடித்திடுவேன்
ஓடி ரன்கள் சேர்த்திடுவேன்
உலகக் கோப்பை பெற்றிடுவேன்.

# கதையும் பாட்டும்

## அஞ்சு குஞ்சு







ஆல மர நிழலிலே,
அழகுக் குருவிக் கூட்டிலே,
அஞ்சு குஞ்சு இருந்தது,
அழிக்கப் பூனை வந்தது.
அஞ்சும் ஒன்றாய்ச் சேர்ந்தது,
அலகு கொண்டு கொத்தியது.
அங்கிருந்து விழுந்த பூனை,
அடியும் பட்டுத் துடித்தது.
ஒற்றுமை இங்கு இருக்கென்று
ஓடிப் பூனை சென்றது.

# படம் பார்த்து கதை கூறு

## நண்பர்கள்





டால்பின் வழங்கும்

# பாட்டுப் பாட வா...

பாகம் : 1 & பாகம் : 2







அச்சிட்டு வெளியிடுவோர் :

## சேகர் பப்ளிசர்ஸ்

3/1078/2, மீனம்பட்டி, சாத்தூர் ரோடு,
சிவகாசி - 626189.

போன் : 04562 274132

பேக்ஸ் : 04562 274133

இ. மெயில் : sekharuma@hotmail.com

இணையதளம் : www.sekardolphin.com

An ISO 9001:2000 Certified Company

ISBN 978-93-81240-34-2